# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க,
# மாநகர சபைகள் (திருத்தம்) சட்டம்

---

*[1987, ஜூன் 25 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.*

*1987, யூன் மாதம் 26 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

---

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : சதம் 30 தபாற் செலவு : சதம் 75

## 1987 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, மாநகர சபைகள் (திருத்தம்) சட்டம்

[1987 ஜூன் 25 ஆம் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ—ஓ 51/86

## மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1987 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, மாநகரசபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப்பெயர்.

2. ஆயிரத்துத் தொளாயிரத்து என்பத்தோராம் ஆண்டின் 33 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான மாநகரசபைகள் கட்டளைச் சட்டத்தின் 327 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவிலுள்ள "ஆண்டுப் பெறுமானம்" என்பதன் வரைவிலக்கணத்திற்குப் பதிலாகப் பின்வரும் வரைவிலக்கணத்தை இடுவதன்மூலம் இத்தால் மேலும் திருத்தப்படுகின்றது :— 252 ஆம் அத்தியாயத்தின் 327 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"ஆண்டுப் பெறுமானம்" என்பது, வாடகைக் குடியிருப்பாளர் பொது வீத வரிகளையும் வரிகளையும் செலுத்துவதற்கும் பொறுப்பேற்றும், அத்துடன் நிலக்கிழார், ஏதேனும் வீட்டை, கட்டிடத்தை, காணியை அல்லது சிறு குடிமனையை அந்த வாடகையை வருவிக்கும் நிலையில் பேணுவதற்கு அவசியமான அவற்றின் திருத்தத்திற்கான, பேணுகைக்கான, அத்துடன் பராமரிப்புக்கான செலவு ஏதேனுமிருப்பின் அதனை மேற்கொள்வதற்குப் பொறுப்பேற்றுக்கொண்டுமிருப்பின், அந்த வீட்டுக்கு, கட்டிடத்திற்கு, காணிக்கு அல்லது சிறு குடிமனைக்கு, ஓராண்டை இன்னோர் ஆண்டுடன் சேர்த்து நியாயமாக எந்த ஆண்டுப் பெறுமானம் வாடகைக் குடியிருப்பாளரிடமிருந்து எதிர்பார்க்கப்படக் கூடுமோ அந்த ஆண்டுப் பெறுமானம் என்று பொருளாகும்;

ஆயின், ஆண்டுப் பெறுமானத் தொகையைக் கணிப்பதிலும், அத்துடன் மதிப்பிடுவதிலும், விடுதொகை அல்லது கழிப்பனவு எதுவும் வாடகைக் குடியிருப்பாட்சி செய்யப்படாத எத்தன்மைத்தான எக்காலப்பகுதிக்காகவும் செய்யப்படமாட்டாது.".

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 100; (வெளிநாடு) ரூபா 200; ஒவ்வோராண்டும் டிசெம்பர் மாதம் 15 ஆந் திகதிக்குமுன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சர், அரசாங்க வெளியீட்டலுவலகம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்.